**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.173** **நாள் : 31.12.2016**

## வரதா புயலால் சிதைந்த மரங்களை நேரடியாக இருப்பு இடங்களில் ஏலம் பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்பு.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள சுமார் 17,000 மரங்கள் கடந்த 12.12.2016 அன்று வந்த வர்தா புயலின்போது வேருடனும் மற்றும் 50000க்கும் மேற்பட்ட மரக்கிளைகளும் கீழே சாய்ந்தன. எனவே, பொதுமக்கள் மற்றும் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாதவண்ணம் அனைத்து மரங்களையும் பெருநகர சென்னை மாநகராட்சி போர்கால நடவடிக்கை எடுத்து அவைகளை மண்டலம்–1 முதல் 15 வரையிலுள்ள 78 எண்ணிக்கையிலான திறந்தவெளி இடங்களில் தற்காலிகமாக இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, 15 மண்டலங்களில் உள்ள 78 இடங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ள மரத்துண்டுகள், சிறு கிளைகள் மற்றும் இலைகள் ஆகியவைகளை உடனடியாக அகற்ற 24.12.2016 அன்று மத்திய அரசு நிறுவனமான MSTC LTD என்ற சேவை நிறுவனத்தின் மூலம் மின்னனு முறையில் ‘‘e’’ ஏலம் நடத்தப்பட்டது. இந்த ஏலத்தின் பெருநகர சென்னை மாநகராட்சி நிர்ணயித்த விலையை விட மிக மிக குறைவான விலைப்புள்ளி பெறப்பட்டதால் 24.12.2016 அன்று நடந்த‘‘e’’ ஏலம் ரத்து செய்யப்பட்டு மீண்டும் ஏலம் 30.12.2016 அன்று ‘‘e’’ ஏலம் விடப்பப்பட்டு, விலைப்புள்ளி பெறப்பட்டது ஏனைய முறைகளில் பெறப்பட்ட மதிப்பீடு தொகைகள் மிகவும் குறைவாக உள்ளது.

எனவே, தற்பொழுது இவைகளை அகற்ற அதிக விலைப்புள்ளிகள் பெற ஒப்பந்ததாரர்கள்/ ஏலதாரர்கள் நேரடியாக இருப்பு வைக்கப்பட்டுள்ள இடங்களை பார்வையிட்டு அதன் ஏலத்தொகையை மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில் குறிப்பிட்டு அந்தந்த இடங்களில் வைக்கப்பட்டுள்ள மூடி முத்திரையிடப்பட்ட பெட்டிகளில் 02.01.2017 அன்று மாலை 3.00 மணி வரை பெறப்படும் மற்றும் ஏலம் முறையில் தீர்வு செய்யப்படும். (Tender-Cum-Auction) என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இடங்களின் விவரம் பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளத்தில் www.chennaicorporation.gov.in –ல் Tree remains Dumped Locations-ல் தெரிந்து கொள்ளலாம்.

**வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**